**கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப் பொறுப்பு - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப் பொறுப்பின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர நம்பிக்கைப் பொறுப்பின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்க இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நம்பிக்கைப் பொறுப்பின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நம்பிக்கை பொறுப்பினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நம்பிக்கைப் பொறுப்பின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாகபோதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான

நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நம்பிக்கைப் பொறுப்பின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நம்பிக்கைப் பொறுப்பின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நம்பிக்கைப் பொறுப்பு செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 70 மற்றும் 88 ஆம் பந்திகளின் பிரகாரம் நடைமுறைச் சொத்துக்கள் திரவத்தன்மை வரிசைக்கு ஏற்ப ஐந்தொகை மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | திரவத்தன்மை வரிசைக்கு ஏற்ப ஐந்தொகை மூலம் வெளிப்படுத்தப்படுவது தொடர்பாக எதிர்வரும் ஆண்டில் கருத்தில் கொள்வதாக | நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நியம இலக்கம் 2 இன் 9 ஆம் பந்திக்கு புறம்பாக சேமிப்புக் கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் முறையே ரூபா 2,951,495, மற்றும் ரூபா 21,645 முதலீடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | முதலீடாக கருதி முன்னைய ஆண்டுகளின் போது கணக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் ஆண்டுகளில் | நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| அதன் காரணமாக ஆண்டின் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான காசின் அளவு ரூபா 2,929,849 ஆல் அதிகரித்திருந்தது. | கணக்குகளை தயாரிக்கும் போது அதனை சரியாக பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் நிலையான வைப்பிற்குரிய வட்டி வருமானம் ரூபா 48,591 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆண்டின் போது வட்டி வீதம் வேறுபட்டமையாலும் பெறவேண்டிய வட்டி கணிப்பீட்டிற்காக இறுதி மீதியை பெற்றுக்கொள்ளும் போது இடம்பெற்றுள்ள தாமதம் காரணமாக இது இடம்பெற்றுள்ளதாகவும் எதிர்வரும் ஆண்டில் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்கப்பட்டு சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக | வட்டி சதவீதத்தின் பிரகாரம் வட்டி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | எசல பெரஹரா நம்பிக்கை பொறுப்பிற்குரிய பொது நம்பிக்கையாளர் திணைக்களத்தின் பொறுப்பில் காணப்படும் ரூபா 20 மில்லியன் நிலையான வைப்பிற்காக ஆண்டின் போது கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 2,249,448 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் 1,000,000 என ரூபா 1,249,448 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | முழு வட்டிப் பணத்தையும் தருமாறு வேண்டுகோள் விடப்பட்ட போதும் கௌரவ நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரின் BD/HRD/ 101/07/3/2014 மற்றும் 2014 நவம்பர் மாத அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் பொது நம்பிக்கையாளர் திணைக்களத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூபா 1,000,000 ஆக இருந்ததுடன் 2019 ஆம் ஆண்டிற்காக அவ்வட்டித் தொகை நம்பிக்கை பொறுப்பிற்கு கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வட்டி சதவீதத்தின் பிரகாரம் வட்டி கணக்கிடப்பட வேண்டும் |
| (இ) | எசல பெரஹரா நம்பிக்கை பொறுப்பின் பாதுகாப்பு பொறுப்பாளராக பெரஹரவை நடாத்துவதற்காக நம்பிக்கை பொறுப்பிறகு வருடக் கணக்காக பணம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர்31 ஆந் திகதிக்கு | எசர பெரஹர நம்பிக்கைப பொறுப்பின் ரூபா 20 மில்லியன் தொகை நம்பிக்கை பொறுப்பின் பாதுகாப்பு பொறுப்பாளராக செயற்பட்ட நம்பிக்கை பொறுப்பாளரால் பிரமுக வங்கியில் வைப்புச் | எசல பெரஹர நம்பிக்கை பொறுப்பின் பொறுப்பாளராக பொது நம்பிக்கையாளர் திணைக்களமாக இருப்பதால் செலுத்த வேண்டிய தொக காணப்படுகின்றதா என |

| | | | |
|---|---|---|---|
| | முன்னர் பெறஹர பொறுப்பிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதியாக ரூபா 17,287,452 பொது நம்பிக்கையாளர் திணைக்களத்தின் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் எசல பெரஹர நம்பிக்கை பொறுப்பினால் அப்பணத்தை செலுத்த வேண்டிய மீதியொன்றாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செய்யப்பட்டுள்ளதுடன் அதற்குரிய வட்டித் தொகையான வருடாந்தம் எசல பெரஹரவிற்கு பணம் வழங்குவது இடம்பெறுவதாக | உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். |
| (ஈ) | பொது நம்பிக்கையாளர் திணைக்களத்திற்கு எசல பெரஹர பொறுப்பிற்காக மீளாய்வாண்டின் போது பணமாக கிடைத்த ரூபா 2,350,000 ஆன வட்டி வருமானத்திலிருந்து அறவிடப்பட்ட ரூபா 94,000 அரசிறை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | பொது நம்பிக்கையாளர் திணைக்களத்தினால் நம்பிக்கை பொறுப்பிற்குரிய வட்டி வருமானத்தில் 4 சதவீதம் அறவிடப்பட்டதாக இதுவரை நம்பிக்கை பொறுப்பிற்கு அறிவிக்கப்படவில்லை எனவும் 1980 இன் 34 ஆம் இலக்க கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப் பொறுப்பு சட்டத்தின் 15(2) பிரிவின் பிரகாரம் பொது நம்பிக்கையாளருக்கு கட்டணமொன்றைச் செலுத்துவதற்கு நம்பிக்கை பொறுப்பு உட்படுவதில்லையென அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக பொது நம்பிக்கையாளர் திணைக்களத்திடமிருந்து விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அரசிறை அறவிடுவது தொடர்பாக சட்டரீதியான தன்மை தொடர்பாக இணக்கப்பாட்டிற்கு வரவேண்டும் |
| (உ) | 2019 ஆம் ஆண்டின் போது நினைவிழக்கச் செய்யும் வைத்தியர்களுக்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 55,000 பெறுமதியான 22 ஆடை தொகுதிகள் இருப்பாக கணக்கீடு செய்யப்படால் செலவினமாக பதிவழிக்கப்பட்டிருந்தது. | நினைவிழக்கச் செய்யும் பதவியணியினருக்கு இதற்கு முன் 10 ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வாறான ஆடை தொகுதியொன்று வழங்கப்பட்டிருந்தது. இந்த ஆடை தொகுதியை மீண்டும் நம்பிக்கை பொறுப்பிற்கு பெற்றுக் கொள்ள வேண்டுகோள் விடப்படவில்லை. பயன் படுத்தும் ஆடைகளை மீண்டும் களஞ்சியப்படுத்து வது பிரயோசனமற்றது என்பதால் நம்பிக்கை பொறுப்பின் செலவின மொன்றாக கருதியதால் இச்செலவினம் ஆண்டு தோறும் செலவிடுவதில்லை யென | 10 ஆண்டுகளுக்கு பயன்படுத்தப்படுவதால் இருப்பாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்க வேண்டும். |

1.6 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1980 இன் 34 ஆம் இலக்க கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப் பொறுப்பு சட்டம் | | | |
| 8(1) ஆம் பிரிவு | ஸ்ரீ தலதா மாளிகையின் தியவடன நிலமே, கண்டி சுற்றுப்புற தேவாலயங்களின் சுற்றுபுற பஸ்நாயக்க நிலமேக்கள், கண்டி நிர்வாக மாவட்டத்தின் மாவட்ட செயலாளருடன் கூடிய சனாதிபதி அவர்களால் பெயரிடப்படுகின்ற மூன்று அங்கத்தவர்கள் உட்பட மதியுரைக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | மதியுரைக் குழுவொன்று நியமிக்கப்படும் போது அது எசல பெரஹர நம்பிக்கை பொறுப்பினால் நியமிக்கப்பட வேண்டியதுடன் சனாதிபதி அவர்களால் பெயரிடப்படுகின்ற மூன்று அங்கத்தவர்களும் அதில் உள்ளடக்கப்படுவர். இதுவரை அதற்காக மூன்று பேர் நியமிக்கப்படவில்லை. எனினும் மதியுரைக் குழுவின் தலைவர் பெரஹர நம்பிக்கை பொறுப்பின் கௌரவ தலைவராவர். ஸ்ரீ தலதா மாளிகையின் தியவடன நிலமே தாமாக இருப்பதால் குழுவொன்று உரிய தடையின்றி நிறைவேற்றியுள்ளாதக | சட்டத்தின் பிரகாரம் மதியுரை குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | | | |
| 4.1 ஆம் பந்தி | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட பாதீட்டை முன்னைய ஆண்டின் செப்தம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் தேசிய பாதீட்டு பணிப்பாளருக்கும் அரச நிதி பணிப்பாளர் நாயகத்திற்கும் சமர்ப்பித்திருக்கவில்லை. | எசல பெரஹர நம்பிக்கை பொறுப்பு எந்த அமைச்சின் வருவதென சட்டத்தினால் குறிப்பிடப்படாமையாலும் எசல பெரஹர நம்பிக்கை பொறுப்பிற்கு வருடாந்த நிதிஏற்பாடு எந்தவொரு அமைச்சினாலும் அல்லது திணைக்களமொன்றினாலும் வருடாந்த நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படுவதில்லை ஆதலால் எசல பெரஹர நம்பிக்கை பொறுப்பால் அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்தம் பாதீட்டு மதிப்பீட்டை பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 1,757,602 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 263,607 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,021,209 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டதுடன் இவ்வீழ்ச்சிக்கு பெரஹர வருமானம் ரூபா 1,889,800 ஆல் குறைவடைந்தமை மற்றும் நினைவிழக்கச் செய்யும் மருந்துகள், உடைகள் மற்றும் பதவியணியினர் செலவினம் ரூபா 177,000 ஆல் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் செயற்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1980 இன் 34 ஆம் இலக்க கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப் பொறுப்பு சட்டத்தின் 6(ஆ) பிரிவின் பிரகாரம் கண்டி வருடாந்த எசல பெரஹர கலை ரீதியான மற்றும் கலாசார பெறுமதிகளை மேமபடுத்தும் தேசிய கலைகள் மற்றும் நடனங்களை மேம்படுத்தும் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | மேற்குறித்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக எசல பெரஹரவில் பங்குபற்றும் 20 குழுக்களுக்காக (உயர்ந்த பட்சம்) விருதுகளும் பணப் பரிசில்களும் வழங்குவதாகவும் | சட்டத்தின் பிரகாரம் சகல நோக்கங்களையும் நிறைவேற்ற வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனினமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டின் ஆசன வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 1,898,050 ஆல் அதாவது 38 சதவீதத்தினாலும் அனுமதிப்பத்திர வருமானம் 27 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தது. | ஆசன வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக ஆசனங்களை விதிப்போரை அழைத்து கூட்டமொன்றை நடாத்தி அவர்களை ஊக்குவிப்பதற்கு நம்பிக்கை பொறுப்பினால் நடவடிக்கை எடுத்திருந்த போதும் வீதிகளில் இலவசமாக பெரஹரவை கண்டுகளிப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளமை மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக இருக்கை வருமானம் குறைவடந்தமை ஆசன வருமானம் குறைவடைவதற்கு காரணமாக இருந்தது. | ஆசன வருமானங்களை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் போது 12 நபர்களினால் அனுமதிப்பத்திரங்கள் இல்லாமல் 17 இடங்களில் ஆசனங்கள் விதிக்கப்பட்டிருந்தன. | அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளாமல் ஆசனங்கள் விதிக்கப்பட்டிருந்த இடங்களுக்கு உரியதாக தண்டப்பணமொன்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக | அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளும் போது முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையொன்றை செயற்படுத்துதுல் |

**4 கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டில் தயாரிக்கப்பட்டிருந்த பாதீடு செய்யப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் உள்ளவாறான வருமானம், செலவினம் என்பவற்றை ஒப்பீடு செய்யும் போது 03 வருமான விடயங்களில் 30 சதவீதம் முதல் 49 சதவீதம் வரைான வீச்சில் குறைவடைந்திருந்தமை 03 செலவின விடயங்களில் 19 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் குறைவடைந்தமை 02 செலவின விடயங்களில் 11 சதவீதம் மற்றும் 15 சதவீதமான அதிகரிப்பொன்றும் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தி யிருக்கவில்லை. | வட்டி வதம் ஆண்டின் நடுப்பகுதியில் வேறுபட்டமை, ஆசனங்களை கொள்வனவு செய்வதற்குப் பதிலாக அநேகமானோர் பாதசாரி இடங்களில் பெரஹரவை கண்டுகளித்தல், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை குறைவடைவதற்கு காரணங்களாக இருந்ததுடன் சந்தை விலை விபரங்கள் வேறுபட்டதன் பேரில் செலவின அதிகரிப்பு இடம்பெற்றுள்ளதாக | பாதீடு செய்யப்பட்ட வருமானம், செலவினம் எதிர்பார்த்த அளவில் இடம் பெறாவிட்டால் திருத்திய மதிப்பீடு ஒன்று அங்கீகரித்துக் கொள்ளப்பட வேண்டும். . |